# மே – 23 – வியாழன்

**“ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள் அவர் பெயரை வாழ்த்துங்கள் அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள்” - திபா 96 : 2**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 15 : 7 – 21

அந்நாட்களில் நெடுநேர விவாதத்துக்குப்பின்பு பேதுரு எழுந்து அவர்களை நோக்கிக் கூறியது ”சகோதரரே, பிற இனத்தவர் என் வாய்மொழி வழியாக நற்செய்தியைக்கேட்டு அதில் நம்பிக்கைகொள்ளும்படி கடவுள் தொடக்கத்திலேயே உங்களிடமிருந்து என்னைத் தேர்ந்தெடுத்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.உள்ளங்களை அறியும் கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்ததுபோல் அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்றுக்கொண்டார்.நம்பிக்கையால் அவர்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை.ஆகவே நம் மூதாதையரோஇ நாமோ சுமக்க இயலாத நுகத்தை இப்போது நீங்கள் இந்தச் சீடருடைய கழுத்தில் வைத்துக் கடவுளை ஏன் சோதிக்கிறீர்கள்?ஆண்டவர் இயேசுவின் அருளால் நாம் மீட்புப் பெறுவதுபோலவே அவர்களும் மீட்புப் பெறுகிறார்கள் என நம்புகிறோம்.”இதைக் கேட்டு அங்குத் திரண்டிருந்தோர் யாவரும் அமைதியாயினர். கடவுள் தங்கள் வழியாகப் பிற இனத்தவரிடம் அடையாளங்களும் அருஞ்செயல்களும் செய்தார் என்பதைப் பர்னபாவும்இ பவுலும் எடுத்துரைத்ததை அவர்கள் கேட்டுக் கொண்டிருந்னர்.அவர்கள் பேசி முடித்ததும், யாக்கோபு அவர்களைப் பார்த்துக் கூறியது ”சகோதரரே, நான் கூறுவதைக் கேளுங்கள்.கடவுள் பிற இனத்தாரிடமிருந்து தமக்கென மக்களைத் தேர்ந்துகொள்ள முதலில் அவர்களைத் தேடிவந்த செய்தியைச் சீமோன் எடுத்துரைக்கக் கேட்டீர்கள்.இறைவாக்கினர் சொற்களும் இதற்கு ஒத்திருக்கின்றன. அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்”இவற்றுக்குப்பின் நான் திரும்பி வந்து விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மீண்டும் எழுப்புவேன் அதிலுள்ள கிழிசல்களைப் பழுது பார்த்து அதைச் சீர்ப்படுத்துவேன். அப்பொழுது மக்களுள் எஞ்சியிருப்போரும் என் திருப்பெயரைத் தாங்கியிருக்கும் வேற்று இனத்தார் அனைவரும் ஆண்டவரைத் தேடுவர், என்கிறார் இதைச் செயல்படுத்தும் ஆண்டவர். ”தொடக்கத்திலிருந்தே இதனை அவர் தெரியப்படுத்தியுள்ளார். எனவே என் முடிவு இதுவே. கடவுளிடம் திரும்பும் பிற இனத்தாருக்கு நாம் தொல்லை கொடுக்கலாகாது .ஆனால் சிலைகளுக்குப் படைக்கப்பட்டுத் தீட்டுப்பட்டவை, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, இரத்தம் மற்றும் பரத்தைமை ஆகியவற்றைத் தவிர்க்குமாறு அவர்களுக்கு நாம் எழுதவேண்டும். மோசேயின் சட்டத்தை அறிவிப்போர் முற்காலத்திலிருந்தே எல்லா நகரங்களிலும் இருக்கின்றனர் அதனை ஓய்வுநாள் தோறும் தொழுகைக் கூடங்களில் வாசித்தும் வருகின்றனர்.”

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் வியத்தகு செயல்களை அறிவியுங்கள்.

## நற்செய்தி : யோவா 15 : 9 – 11

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள்.நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்.என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்” என்றார்.

**தியானம்:** இறைவனின் அன்பை அளவிட்டு, அல்லது ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? அன்று சீடர்களோடு பந்தியமர்ந்த வேளையில், அதுவே அவர்களுடனான இறுதி இராவுணவு என்பதனை இயேசு அறிந்திருந்தார். எனினும், அவரது அன்பை எம்மோடு பகிர்ந்து கொள்ள அதுவே எம்முடனான முதலாவது திருவிருந்துப்பந்தி என்பதனையும் அவர் புரிந்திருந்தார். பல்வேறுவிதமாக போதித்த இயேசு இன்றைய நற்செய்தியில் சற்று மாறுபட்டவராக, அதேவேளையில் பிதாவின் அன்பை புரிந்துகொள்ள முடியாத எமக் குள்ள மந்தபுத்தியை சீர்செய்ய முயல்பவராக இருப்பதனை நாம் அவதானிக்கலாம். பரலோக தகப்பன் தமது திருமகன் இயேசுவை அன்பு செய்கின்றார். இந்த எல்லை கடந்த, பரிசுத்தமான அன்பினை திருமகன் இயேசுவின் ஊடாக எங்கள் ஒவ்வொருவருக்கும் நிபந்தனையற்ற விதத்தினில் தருவதற்கு தயாராக இருக்கின்றார். இதுவே, இன்று எமது மத்தியில் வார்த்தை வடிவில் பரப்படும் இறைமகன் இயேசுவின் நற்செய்தியாக இருக்கின்றது. எமது பரலோக தகப்பன் நல்லோர் மேலும், தீயோர் மேலும் சமனாக மழையைப் பொழிபவர். இறைவன் முன்னிலையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதமில்லை. எமது பரலோக தகப்பனின் அன்பானது பாவியான கள்வனையும் விபச்சாரியான மதலேனாளையும் மனம்மாற வைத்தது. எனவே, எமது வாழ்வில் ஆக்கம் அளித்து அர்த்தம் வழங்கக்கூடிய, நிபந்தனையற்ற அன்பை அடைய நாம் ஏன் தாமதிக்கவேண்டும்? எமது கடந்தகால நிலை எதுவாக இருந்தாலும் அதனை மறந்து, எம்மீது நிபந்தனையற்ற விதத்தினில் எக்காலத்திலும் அழிந்து போகக்கூடாத அன்பைப் பொழியும் எமது பரலோக தகப்பனோடு ஏன் நாம் அன்பாக அன்னியோன்னியமாக இருக்கக்கூடாது?